# வாக்குமூலம்

## நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு

## வழக்கு எண்.சி.சி.எண்.32/2021

## வழக்கு சாட்சி.அ.சா.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ராமச்சந்திரன் | தொழில் | : |
| தந்தை பெயர் | : | தனிகாசலம் | வயது | : |
| கிராமம் | : | | தாலுக்கா | : |

(வழக்கின் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2025**

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து கொண்டு, ஜவுளி கடையில் வேலை செய்து வருகிறேன்.

எனக்கு இந்த வழக்கைப்பற்றி எதுவும் தெரியாது. நான் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு, அனுமதிக்கப் பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 18.10.2020-ம் தேதி அன்று இரவு 10.20 மணிக்கு நீங்களும், உங்கள் நண்பர் மனோஜ்குமாரும் நின்று முருகன் மெஸ் அருகே நின்று பேசிக் கொண்டிருந்தபோது, அந்த மெஸ்ஸில் மூக்கையா வியாபாரம் முடித்து, கடையை அடைக்க தயாராகி கொண்டிருந்தபோது, வழக்கின் எதிரிகளான கோபியும், ராஜேஷ்-ம் மது போதையில் வந்து, சாப்பிட பரோட்டா வேண்டும்

என்று கேட்டதற்கு, மூக்கையா பரோட்டா இல்லை, தோசை தான் உள்ளது என்று கூறியதற்கு அவரை தகாத வார்த்தைகளால் பேசி, கேட்ட பரோட்டாவை கொடுக்க மாட்டியா என்று கோபி கடையில் இருந்த காய்கறி வெட்டும் கத்தியை எடுத்து, மூக்கையாவின் கழுத்தின் வலது புறத்தில் கீறிய போது, நீங்கள் உடன் இருந்துவிட்டு, ராஜேஷ் மூக்கையாவைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்த போதும் கண்உற்ற சாட்சியாக பார்த்துவிட்டு, தற்போது வழக்கைப்பற்றி எதுவும் தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.32/2021**

**வழக்கு சாட்சி.அ.சா.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனோஜ்குமார் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | பழனிச்சாமி | வயது | : | |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |

(வழக்கின் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2025**

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து கொண்டு, பழைய பேப்பர் கடை வைத்து நடத்தி வருகிறேன்.

எனக்கு இந்த வழக்கைப்பற்றி எதுவும் தெரியாது. நான் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு, அனுமதிக்கப் பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 18.10.2020-ம் தேதி அன்று இரவு 10.20 மணிக்கு நீங்களும், உங்கள் நண்பர் ராமச்சந்திரனும் நின்று முருகன் மெஸ் அருகே நின்று பேசிக் கொண்டிருந்தபோது, அந்த மெஸ்ஸில் மூக்கையா வியாபாரம் முடித்து, கடையை அடைக்க தயாராகி கொண்டிருந்தபோது, வழக்கின் எதிரிகளான கோபியும், ராஜேஷ்-ம் மது போதையில் வந்து, சாப்பிட பரோட்டா வேண்டும்

என்று கேட்டதற்கு, மூக்கையா பரோட்டா இல்லை, தோசை தான் உள்ளது என்று கூறியதற்கு அவரை தகாத வார்த்தைகளால் பேசி, கேட்ட பரோட்டாவை கொடுக்க மாட்டியா என்று கோபி கடையில் இருந்த காய்கறி வெட்டும் கத்தியை எடுத்து, மூக்கையாவின் கழுத்தின் வலது புறத்தில் கீறிய போது, நீங்கள் உடன் இருந்துவிட்டு, ராஜேஷ் மூக்கையாவைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்த போதும் கண்உற்ற சாட்சியாக பார்த்துவிட்டு, தற்போது வழக்கைப்பற்றி எதுவும் தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால், சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

## வாக்குமூலம்

## நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு

## வழக்கு எண்.சி.சி.எண்.32/2021

## வழக்கு சாட்சி.அ.சா.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கவேல் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சதாசிவம் | வயது | : | |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |

(வழக்கின் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2025**

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து கொண்டு, மெக்கானிக் வேலை செய்து வருகிறேன்.

சுமார் 5 வருடங்களுக்கு முன் ஒரு நாள் டீச்சர்ஸ் காலனி இறக்கத்தில், சூரம்பட்டி வலசு செல்லும் திருப்பத்தில் போலீசார் வந்து என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள், நான் கையொப்பம் செய்தேன். ஏதோ அடிதடி பிரச்சனை நடந்ததாக கூறி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். நீதிமன்றத்தில் தற்போது என் முன்னிலையில் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தீர்களா என்றால், இல்லை, எனது கடையில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். நீங்கள் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்று சொன்னால், சரிதான். அந்த ஆவணம் உங்கள் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றால், சரிதான். காவல் நிலையத்திலிருந்து எழுதி வரப்பட்ட ஆவணம் தான் என்றால், சரிதான்.

எதிரிகள் தரப்பு மறு விசாரணை

இல்லை.